# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி

## அசல் வழக்கு எண் 17/2022

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | .. | பச்சியண்ணன் | மதம் | .. | இந்து |
| தந்தை / கணவர் பெயர் | .. | குப்பகவுண்டர் | தொழில் | .. | கூலி வேலை |
| வயது | .. | 75 | ஜாதி | .. | |
| கிராமம் | .. | கன்னந்தேதி | நாள் | .. | 14.10.2022 |
| வட்டம் | .. | சங்ககிரி | | | |

2022 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 14-ஆம் நாள் வெள்ளிக்கிழமை திரு. பச்சியண்ணன் த/பெ. குப்பகவுண்டர் என்பவரின் சாட்சிய வாக்குமூலம் 1969-ஆம் ஆண்டின் 44-வது ஏற்பாட்டின்படி திரு.இரா.ராதாகிருஷ்ணன், பி.எ.,பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, சங்ககிரி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

**வாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சியின் முதல் விசாரணை.**

நான் இவ்வழக்கில் 1 ம் வாதி ஆவேன். நான் இவ்வழக்கில் வாதிகள் தரப்பு 1 ஆம் சாட்சி. எனது தரப்பு சாட்சியத்தை நிரூபண பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்து இருக்கிறேன். நிருபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். எனது சாட்சியத்தை ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

1) வா.த.சா.1ன் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.த.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

2) 01.04.2017 தேதியிட்ட 1ம் வாதிக்கு தேசிய ஊரக வேலை வாய்ப்பு திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட அடையாள அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.த.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) 1ம் வாதியின் குடும்ப அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.த.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 28.03.2015 தேதியிட்ட கன்னந்தேரி பஞ்சாயத்தால் 1ம் வாதிக்கு வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

5) 17.02.2021 தேதியிட்ட கன்னந்தேரி பஞ்சாயத்தால் 1ம் வாதிக்கு வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

6) 23.12.2000 தேதியிட்ட கன்னந்தேரி பஞ்சாயத்தால் 1ம் வாதிக்கு வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

7) 11.09.2017 தேதியிட்ட 1ம் வாதி பெயரிலுள்ள மின் கட்டண ரசீது அசல் **வா.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

8) 02.08.2021 தேதியிட்ட 1ம் வாதி பெயரிலுள்ள மின் கட்டண ரசீது அசல் **வா.த.சா.ஆ.8** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

9) 2ம் வாதியின் ஆதார் அட்டை நகல் (அசலுடன் ஒப்பிட்டு பார்க்கப்பட்டது) **வா.த.சா.ஆ.9** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

10) 09.12.2021 தேதியிட்ட கன்னந்தேதி பஞ்சாயத்தால் 2ம் வாதிக்கு வழங்கப்பட்ட வீட்டு வரி ரசீது அசல் **வா.த.சா.ஆ.10** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

11) வழக்கு சொத்திற்கான குறுந்தகடு மற்றும் புகைப்படங்கள் (6 எண்ணிக்கை) **வா.த.சா.ஆ.11** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

பிரதிவாதிகள் தோன்றா தரப்பினர்களாக இருந்து வருவதால் குறுக்கு விசாரணை இல்லை.

ஒப்பம் /பச்சியண்ணன்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.